முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2024 சனவரி

## (202) டிஜிடல் சூழலில் தகவல் முறைமைகள்

(Information Systems in Digital Environment)

2024-02-11
காலை
[08.45 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 08
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

# பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக*

**1.1** செயலாற்றுகையில் வியத்தகு மேம்பாடுகளைக் கொண்டுவருவதற்கான வணிகச் செயன்முறைகளின் அடிப்படை மீள்சிந்தனை, மீள்வழிப்படுத்தல் மற்றும் மீள்வடிவமைப்பு என்பன எவ்வாறு அழைக்கப் படுகிறது?

(1) தரவுத்தள முகாமைத்துவம்.
(2) வணிக செயன்முறை மீள்-பொறியியலாக்கல்.
(3) வணிகச் செயன்முறை வெளிமூலமிடல்.
(4) தரவுச் சுரங்கம்.

**1.2** கீழ்வருவனவற்றுள் நிறுவனமொன்றிலுள்ள IT உட்கட்டமைப்பின் ஒரு பகுதி **அல்லாதது** எது?

(1) தரவு முகாமைத்துவமும் சேமிப்பும்.
(2) கணினி வன்பொருளும் இயக்க முறைமைத் தளங்களும்.
(3) ஆலோசனை மற்றும் முறைமை ஒருங்கிணைப்பு சேவைகள்.
(4) சந்தைப்படுத்தல் விழிப்புணர்வு மற்றும் IT இன் தாக்கம் பற்றிய அறிவு.

**1.3** சமீபத்தில் தமது செயற்பாடுகளை ஆரம்பித்த ஒரு கம்பனி, வெவ்வேறு அம்சங்கள் ஊடாக முகில் கணினியியல் சேவைகளுக்கு நகர்வதன் நன்மைகள் பற்றி பகுப்பாய்வு செய்கிறது. கீழ்வரும் கூற்றுக்கள், கிடைக்கக்கூடிய முகில் தீர்வுகளை (Cloud solutions) பகுப்பாய்வு செய்வதற்காகத் தயாரிக்கப்படுகின்ற அவர்களது அறிக்கைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

**(a)** வணிகத்தின் வளர்ந்துவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முகில் தீர்வுகளை இலகுவாக அளவிட முடியும்.

**(b)** உலகிலுள்ள எந்தவொரு புவியியல்சார் அமைவிடத்திலிருந்தும் அனைவராலும் ஒரே மாதிரியான சேவைகளை அணுக முடியும் என்பதால் முகில் சேவைகள் உயர் பாதுகாப்பு வசதிகளை வழங்காது.

**(c)** முகில் கணினியியல், வணிகங்கள் தமது தரவுகளையும் பிரயோகங்களையும் விரைவாகவும் நம்பகத்தன்மையான முறையிலும் மீட்டெடுக்க வசதியளிக்கின்றன.

**(d)** முகில் கணினியியல், பல்வேறு அம்சங்களுடன் தனிப்பட்ட முகில், பொதுவான முகில் மற்றும் கலவை முகில் தீர்வுகள் ஆகியவற்றை வழங்குகிறது.

மேலுள்ளவற்றுள், சரியான கூற்றுக்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.
(2) **(a)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்.
(3) **(a)** யும் **(b)** யும் **(d)** யும் மாத்திரம்.
(4) மேற்கூறிய யாவும்.

**1.4** வணிகச் செயன்முறை வெளிமூலமிடல் (BPO) தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக :

**(a)** இது உற்பத்திக் கம்பனிகளால் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

**(b)** இது கம்பனிகளுக்கு போட்டி அனுகூலங்களை வழங்குகிறது.

**(c)** வணிகங்களின் உணர்திறன்மிக்க தகவல்களை பரிமாறுவதால் BPO இனைப் பயன்படுத்துவது பாதுகாப்பு அபாயம் மிக்கதாகும்.

மேலுள்ளவற்றுள் சரியான கூற்றினை/ கூற்றுக்களைத் தெரிவு செய்க :

(1) **(b)** மாத்திரம்.
(2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.
(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.
(4) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

**1.5** கீழ்வருவனவற்றுள் IT முறைமைகள் மற்றும் தரவுகளுக்கான வேண்டுமென்றே மற்றும் தீங்கிழைக்கின்ற தகவல் பாதுகாப்பு அச்சுறுத்தலாக கருதப்படுவது எது?

(1) Malware.
(2) Keystroke Loggers.
(3) Back door access to IT System.
(4) மேற்கூறிய யாவும்.

**1.6** நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமைகளின் புகழில் செல்வாக்குச் செலுத்துகின்ற கீழ்வரும் காரணங்களைக் கவனத்தில் கொள்க :

**(a)** சிறிய கம்பனிகள் அடிப்படை ERP முறைமையுடன் தொடங்க முடியும் என்பதுடன் அவை விரிவடையும்போது அதனை விரிவாக்கம் செய்யலாம்.

**(b)** ERP முறைமையைக் கொண்டிருப்பது, வளர விரும்புகின்ற ஒரு சிறிய வணிகத்திற்கு அல்லது சந்தையில் தனது நிலையைப் பேண விரும்புகின்ற பல்தேசிய நிறுவனத்திற்கு போட்டித்தன்மையை அளிக்கிறது.

**(c)** ERP முறைமைகளில் செய்யப்படும் ஆரம்ப முதலீடு குறிப்பிடத்தக்கதாக இருக்க முடியாது.

**(d)** வணிகங்கள் பல்வேறு செயன்முறைகளை தன்னியக்கப்படுத்தி, ஒருங்கிணைப்பதற்கு ERP முறைமைகள் உதவுகின்றன.

மேலுள்ளவற்றுள், சரியான கூற்றுக்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.
(2) **(a)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்.
(3) **(a)** யும் **(b)** யும் **(d)** யும் மாத்திரம்.
(4) மேற்கூறிய யாவும்.

**1.7** கீழ்வருவனவற்றுள் வணிகங்கள் மீதான சமூக ஊடகம் மற்றும் வலையமைப்பின் சாதகமான தாக்கமாக **அமையாதது** எது?

(1) நிகழ்நேரத்தில் தொழில்துறைப் போக்குகளைக் கண்டறிவதற்கான ஆற்றல்.
(2) உள்ளடக்கம் மீதான கட்டுப்பாட்டின் குறைபாடு.
(3) போட்டியாளர்கள் மீதான நிலைப்படுத்தல் அதிகாரம்.
(4) சிறந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை வழங்குதல்.

**1.8** முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) என்பது பல குறிப்பான முறைமைகளை ஒருங்கிணைக்கின்ற ஒரு பரந்த சொல் ஆகும். MIS இல் உள்ளடக்கப்பட்டுள்ள முறைமையின் ஒரு பிரதான வகையாக **அமையாதது** கீழ்வருவனவற்றுள் எது?

(1) சந்தைப்படுத்தல் தகவல் முறைமை.
(2) நிதிக் கணக்கீட்டு முறைமை.
(3) வணிக நுண்ணறிவு முறைமை.
(4) பரிவர்த்தனை செயன்முறைப்படுத்தல் முறைமை.

**1.9** எந்தவொரு அமைச்சு, திணைக்களம், மாகாண சபை, மாகாண அமைச்சு மற்றும் திணைக்களம் அல்லது உள்ளூராட்சி சபை அல்லது அலுவலக அமைப்பு அல்லது ஒரு குறிப்பிட்ட முறையில் அரசாங்கம் அல்லது சட்டநியதிச் சபைக்குச் சொந்தமான அல்லது அரசாங்கம் அல்லது சட்டநியதிச் சபையால் கட்டுப்படுத்தப்படுகின்ற முகவராண்மை மற்றும் இலத்திரனியல் தொடர்பாடலின் நம்பகத்தன்மையான வடிவங்கள் மூலம் பொதுச் சேவையின் வினைத்திறனான வழங்கலை ஊக்கப்படுத்துவதுடன் எந்தவொரு படிவ வடிவிலான விண்ணப்பத்தை அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தை இலத்திரனியல் வழிமுறையில் தாக்கல் செய்வதற்கு வசதியளிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சட்டம் :

(1) 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பச் சட்டம்.

(2) 2017 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலத்திரனியல் பரிவர்த்தனைகள் (திருத்தச்) சட்டம்.

(3) 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம்.

(4) 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிக் குற்றங்கள் சட்டம்.

**1.10** இண்டிகோகோ (Indiegogo) என்பது கீழ்வருவனவற்றுள் எதற்கான உதாரணம்?

(1) கட்டச்சங்கிலி (Blockchain).

(2) கூட்ட நிதியிடல் (Crowdfunding).

(3) இயங்குதள முறைமை.

(4) தரவுத்தள முகாமைத்துவ முறைமை.

(02 புள்ளிகள் வீதம், 20 புள்ளிகள்)

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவுசெய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.11** தனிப்பட்ட தகவல் முகாமைத்துவ மென்பொருளை மற்றைய சாதனங்கள் மற்றும் இயங்கு தளங்களுடன் ஒத்திசைத்து ஒருங்கிணைக்கலாம். இதனால், பயனர்கள் தங்கள் தகவல்களை பல மூலங்களிலிருந்து அணுக முடியும்.

**1.12** நடமாடும் சாதனங்கள் பொதுவாக மின்னஞ்சல், ஆவணத் திருத்தம் மற்றும் அட்டவணைப்படுத்தல் போன்ற உற்பத்தித்திறன் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுவதுடன் அவை சிக்கலான பயன்பாடுகள் அல்லது மென்பொருள் இயங்குவதற்கான இயலுமையைக் கொண்டவை அல்ல.

**1.13** வணிகத்தின் சந்தைப் போக்குகள் மற்றும் வடிவங்களை வணிக நுண்ணறிவு நிகழ்ச்சித் திட்டங்களைப் பயன்படுத்தி இனங்காண முடியாது.

**1.14** தகவல் முறைமை தனியுரிமை என்பது அதிகாரமளிக்கப்படாத அணுகல் அல்லது வெளிப்படுத்தலில் இருந்து உணர்திறன்மிக்க தரவுகளைப் பாதுகாப்பதைக் குறிக்கிறது.

**1.15** கூட்ட நிதியிடல் தளங்கள் முதலீட்டாளர்களுக்கான முதலீட்டு வருவாய் ஒன்றை எப்பொழுதும் உத்தரவாதப்படுத்துகிறது.

(01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

தகவல் முறைமை என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக தகவல்களை சேகரித்து, செயன்முறைப் படுத்தி, சேமித்து விநியோகிப்பதற்காக ஒன்றாகப் பணியாற்றுகின்ற ஒன்றுடனொன்று இணைக்கப்பட்ட பாகங்களின் ஒரு தொகுதியாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) தகவல் முறைமை ஒன்றின் மூன்று (03) பாகங்களை (components) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) வணிக நிறுவனங்களின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மீது தகவல் முறைமைகள் மற்றும் தகவல் தொழினுட்பம் ஆகியவற்றின் இரண்டு (02) தாக்கங்களை (impacts) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) "தகவல் தொழினுட்பம் (IT)" மற்றும் "தகவல் முறைமைகள் (IS)" ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஊழியர்களைக் கொண்டுள்ள கம்பனி ஒன்றின் IT முகாமையாளராக நீங்கள் உள்ளீர்கள் என கற்பனை செய்க. கம்பனியானது சமீபத்தில் நடமாடும் கணினியியல் தந்திரோபாயத்தை நடைமுறைப்படுத்தி, ஊழியர்களுக்கு மேம்பட்ட உற்பத்தித்திறனை வழங்குகிறது. கம்பனி கொள்வனவு செய்யப்பட வேண்டிய சில மென்பொருள் தேவைகளை இனங்கண்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஊழியர்களிடையே வினைத்திறனான தொடர்பாடலையும் ஒத்துழைப்பையும் எளிதாக்குவதற்கு கம்பனியின் ஊழியர்களால் பயன்படுத்தப்படக்கூடிய இரண்டு (02) நடமாடும் சாதனங்களை (mobile devices) **நிரற்படுத்துக.** (02 புள்ளிகள்)

(b) மேலே இனங்காணப்பட்ட நடமாடும் சாதனங்கள் ஒவ்வொன்றிற்கும் கிடைக்கக்கூடிய வலையமைப்பு இணைப்புத் தெரிவு (network connectivity option) ஒன்றையும் இயங்குதள முறைமை (operating system) ஒன்றையும் **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(c) கீழ்வரும் ஒவ்வொரு தேவைகளுக்கும் பொருத்தமான பிரயோக மென்பொருள் வகையையும் ஒவ்வொரு வகைக்கும் பொருத்தமான மென்பொருள் பொதிகளையும் (Software packages) **இனங்காண்க :**

(i) கம்பனிக்கு உரை ஆவணங்களை வினைத்திறனான வகையில் உருவாக்குதல், திருத்துதல் மற்றும் வடிவமைப்பதற்கான தேவைகள் காணப்படுகின்றன. இந்தக் கருவியானது அணி உறுப்பினர்களிடையே கூட்டு முயற்சிகளை எளிதாக்குவதோடு பதிப்புக் கட்டுப்பாடு மற்றும் ஆவணங்களின் எளிதான பகிர்வு ஆகியவற்றையும் உறுதி செய்கிறது. இதற்கு மேலதிகமாக, அடிப்படைக் குறிப்புகள் முதல் விரிவான அறிக்கைகள் வரை பல்வேறு ஆவணத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கான பல்வேறு வடிவமைப்புத் தெரிவுகளை இது வழங்குகிறது.

(ii) கம்பனியானது பிரசுரங்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், பதாதைகள் மற்றும் விளம்பரங்கள் போன்ற சந்தைப்படுத்தல் பிணையத்தை (marketing collateral) வடிவமைத்துத் தயாரிக்க வேண்டும். இந்த மென்பொருள் தளவமைப்பு, வரைகலை போன்றவற்றின் மீது துல்லியமான கட்டுப்பாட்டை அனுமதிப்பதுடன் சந்தைப்படுத்தல் பொருள்கள் பார்வையை ஈர்ப்பனவாகவும் நோக்கச் செய்தியை பயனுறுதிமிக்க முறையில் வெளிப்படுத்துவனவாகவும் இருப்பதை உறுதிப்படுத்துகிறது. (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

ஒரு வணிக நிறுவனம் உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சந்தைகளை உள்ளடக்கிய பல்வேறு வாடிக்கையாளர் களுக்கும் இலத்திரனியல் - வர்த்தக மற்றும் நடமாடும் வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்கு வசதியளிக்கின்ற ஒரு புதிய நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமையை செயற்படுத்த உத்தேசித்துள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) IT முறைமையைத் தேர்ந்தெடுத்து நடைமுறைப்படுத்தும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய இரண்டு (02) காரணிகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) வாடிக்கையாளர்களுக்கு இலத்திரனியல்-வர்த்தகத்தின் மூன்று (03) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) தகவல் முறைமைகளின் “நோக்கெல்லை மற்றும் நோக்கத்தை (Scope and Purpose)” கருத்திற் கொண்டு நிறுவன வளத் திட்டமிடல் முறைமைகள் (ERP) மற்றும் தொழிற்பாட்டுத் தகவல் முறைமைகள் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

முன்னணித் தொழினுட்ப கம்பனியான **நெக்ஸஸ் சொல்யூஷன்ஸ்,** வாடிக்கையாளர்களுடன் சேர்ந்து இயங்குவதற்கும் முன்னணிகளை உருவாக்குவதற்குமென அதன் தற்போதைய பண்டக்குறியை மேம்படுத்த சமூக ஊடகத் தளங்களை ஊக்குவிக்கத் திட்டமிடுகிறது. எவ்வாறாயினும், அவர்கள் தனியுரிமை மற்றும் இணையப் பாதுகாப்பு உள்ளிட்ட IS பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி அறிந்திருந்தனர். மேலும், கம்பனி நீடித்திருக்கத்தக்க வணிக நடைமுறைகளைப் பின்தொடர்வதில் உறுதியாக உள்ளதுடன் அதன் காபன் தடத்தைக் (Carbon footprint) குறைப்பதற்காக பசுமை கணினியியலுக்கு வலுவான முக்கியத்துவத்தையும் அளிக்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) கீழ்வரும் தேவைகளுக்குப் பொருத்தமான சமூக ஊடக அம்சங்களைப் (features) **பட்டியலிடுக** :

(i) பொருள் ஊக்குவிப்பு (Product Promotion).

(ii) விற்பனைக்குப் பின்னரான சேவைகள். (02 புள்ளிகள்)

(b) பசுமைக் கணினியியல் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு **நெக்ஸஸ் சொல்யூஷன்ஸ்** கவனத்திற் கொள்ள வேண்டிய இரண்டு (02) காரணிகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்து பயனர்களையும் வணிகத் தரவுகளையும் பாதுகாப்பதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் இரண்டினை (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

நீங்கள் ஒரு பிரபல வாடகைக் கார் சேவையான **ரெக்ரைட்** கம்பனியால் அவர்களது தொழினுட்ப உட்கட்டமைப்புகளை மதிப்பீடு செய்து மேம்படுத்தல்களை பரிந்துரை செய்வதற்காக பணியமர்த்தப்பட்ட ஒரு சிரேஷ்ட ஆலோசகர் ஆவீர்கள். நிதிசார் தொழினுட்பத்தை மேம்படுத்துதல், செயற்கை நுண்ணறிவு ஆற்றலை அறுவடை செய்தல் மற்றும் பணியாளர்களின் பயிற்சி சார்ந்த முயற்சிகளுக்கு M-Learning ஐப் பின்பற்றுவதை உத்தமமாக்கல் போன்றவை மீது முதன்மையான கவனத்தைச் செலுத்தி, முற்றும் அடங்கலான வழிகாட்டுதலை வழங்குவதில் நீங்கள் ஈடுபட்டுள்ளீர்கள்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **ரெக்ரைட்** வாடகைக் கார் சேவையானது அதன் செயற்பாடுகளில் நிதித் தொழினுட்பங்களைக் கூட்டிணைக்கின்ற மூன்று (03) முதன்மையான பகுதிகளை (Primary areas) **அடையாளம் காண்க.** (03 புள்ளிகள்)

(b) **ரெக்ரைட்** வாடகைக் கார் சேவையானது m-learning செயலி ஒன்றை விருத்திசெய்வதன் மூன்று (03) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) **ரெக்ரைட்** வாடகைக் கார் சேவையின் முறைமையினுள் எவ்வாறு செயற்கை நுண்ணறிவை (AI) கட்டமைக்கலாம் என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட Super Drug Mart கம்பனி** என்பது மேல் மாகாணத்தில் பத்துக் கிளைகளைக் கொண்டுள்ள ஒரு மருந்தக வலையமைப்பாகும். இதன் தலைமையகம் பொரளையில் அமைந்திருப்பதுடன் இக்கம்பனி இலங்கையிலுள்ள புகழ்பெற்ற ஒரு கம்பனியிடமிருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்து, தமது மருந்தக வலையமைப்பின் ஊடாக விற்பனை செய்கிறது. எவ்வாறாயினும், கம்பனி தமது மருந்தகங்களில் இருப்பு மட்டங்கள், மருந்துச்சீட்டுச் செயன்முறைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகளை ஒருங்கிணைப்பதில் சவால்களை எதிர்கொண்டது. இது வினைத்திறனற்ற செயற்பாடு, அவ்வப்போது இருப்பு இல்லாமை மற்றும் சேவை வழங்குவதில் தாமதம் போன்றவற்றுக்கு வழிவகுத்தது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மருந்தக வலையமைப்பானது செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் திறன் கொண்ட ஒருமுகப்படுத்தப்பட்ட (மையப்படுத்தப்பட்ட) தகவல் முறைமையொன்றை நடைமுறைப்படுத்த முயன்றது. தமது அனைத்து மருந்தகங்களையும் இணைத்து, பல்வேறு சமூக ஊடகத் தளங்களில் விளம்பர நடவடிக்கைகளைத் தொடங்கும் வகையில் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட முறைமையின் ஊடாக நிகழ்நிலை (ஒன்லைன்) மருந்தக சில்லறை விற்பனை அம்சங்களை ஆரம்பிக்க எதிர்பார்த்தனர்.

புதிய தகவல் முறைமையுடன் அனைத்து கிளைகளையும் ஒருங்கிணைப்பதற்கு ஒரு பாதுகாப்பான இணைய இணைப்பை நிறுவுவதற்கு **வரையறுக்கப்பட்ட Super Drug Mart கம்பனி** தீவிரமாக முயன்று வருகிறது. இவற்றுக்கு மேலதிகமாக, நாட்டதாரர்களை (stakeholders) ஈர்ப்பதற்காக கம்பனி தனது சொந்த இணையத்தளத்தை நிறுவுவதற்கும் திட்டமிடுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) இணையச் சேவை வழங்குநர் (ISP) ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்போது **வரையறுக்கப்பட்ட Super Drug Mart கம்பனி** கவனத்திற் கொள்ள வேண்டிய நான்கு (04) காரணிகளை **அடையாளம் காண்க.** (04 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட Super Drug Mart கம்பனியின்** மூன்று (3) முகாமைத்துவ மட்டங்களில், ஒவ்வொன்றிலும் பயன்படுத்தக்கூடிய ஒவ்வொரு தகவல் முறைமையை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) **வரையறுக்கப்பட்ட Super Drug Mart கம்பனி** தரவுச் சுரங்கத் தொழினுட்பங்களைத் தொழிற்படுத்தக் கூடிய நான்கு (04) பகுதிகளைக் (areas) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) **வரையறுக்கப்பட்ட Super Drug Mart கம்பனி** ஒரு இணையத்தளத்தை நடைமுறைப்படுத்துவதால் பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு (02) நன்மைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(e) முகில் அடிப்படையிலான தீர்வொன்றின் ஊடாக வணிகச் செயற்பாட்டின் வினைத்திறன் அடையப் படுகின்ற இரண்டு (02) வழிமுறைகளை (ways) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(f) **வரையறுக்கப்பட்ட Super Drug Mart கம்பனி** சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதால் எழக்கூடிய மூன்று (03) தனியுரிமை கரிசினைகளை (privacy concerns) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# <u>செயல் வினைச்சொல் செவ்வை நிரல்</u>

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |